1993 ஏப்ரல் 28]

514—

சங்ககிரி தொகுதி நல்லாம் பாளையத்தில் மகளிர்க்கான பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்.

*11342 டாக்டர் வெ. சரோஜா :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சங்ககிரி தொகுதி, திருச்செங்கோடு வட்டம், எலச்சிப் பாளையம் ஒன்றியம், நல்லாம்பாளையம் கிராமத்தில் மகளிர்க்கான பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்—மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே :

(அ) சங்ககிரி தொகுதி, நல்லாம்பாளையம் கிராமத்தில் ஏற்கெனவே பால் உற்பத்தியாளர் சங்கம் செயல்பட்டு வருவதால் மகளிர்க்கென பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

டாக்டர். வெ சரோஜா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் உள்ள அனைத்து பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் கோரிக்கையினைக் கருணையோடு பரிசீலித்து, பால் விற்பனை கொள்முதல் விலையை அதிகப்படுத்தியதற்காக, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு அனைத்து பால் உற்பத்தியாளர் சங்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எலச்சி பாளையம் ஒன்றியம், நல்லாம்பாளையம் பகுதியில் பெண் சிசு வதை அதிகமாக இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு, அங்குள்ள பெண்கள் பொருளாதாரத்தில் முன்னேறி, தன்னுடைய குழந்தையைத்தானே வளர்த்துக் கொள்ளும் ஒருமனத்திண்மையை அவர்கள் வளர்த்துக்கொள்ளும் வகையில், பால் உற்பத்தியில் அங்குள்ள பெண்கள் மிகவும் ஆர்வமாக இருப்பதாலும். இதை மீண்டும் அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்லாம்பாளையம் கிராமத்தில் 27-5-1992-லேதான் அந்தச் சங்கம் பதிவு செய்யப்பட்டு பால் உற்பத்தியாளர் சங்கம் செயல்பட்டு வருகிறது. அந்தச் சங்கமும் இலாபத்தில் செயல்பட வேண்டும். அந்தச் சங்கத் திற்குப் போக இன்னும் அதிகமாக பால் உற்பத்தி செய்ய முடியும் என்ற சூழ்நிலை அந்த ஊரில் இருக்குமானால் மாண்புமிகு உறுப் பினருடைய கோரிக்கையைப் பரிசீலனை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராம அளவில் பால் உற்பத்தியாளர் சங்கம், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர் ஒன்றியமும், மாநில அளவில் ஒன்றியங்களின் இணையமும் என்று இந்த நிர் வாக அமைப்பைக் கொண்டு பால் உற்பத்தியில் மிகப் பல சாதனைகளைப் புரிந்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக் டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் பால் உற்பத்தி யில் சேலம் மாவட்டம் தினமும் 1,99,000 லிட்டர் பால் உற் பத்தி செய்து தமிழகத்தில் இரண்டாவது இடத்தைப்பெற்றுள்ளது. சேலம் மாவட்ட மக்களுக்கு அதற்காக நன்றியைச் சொல்வ தோடு, வரும் ஆண்டில் இது முதலிடத்தைப் பெறவேண்டுமென்ற நோக்கோடு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலனை செய்து பெண்களுக்கான இந்த பால் கூட்டுறவு உற்பத்தி சங்கத்தை ஏற்படுத்த முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியில் முதலிடத்தில் வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் வருகிறது. இரண்டா வது இடத்திலே சேலம் மாவட்டம் இருக்கிறது. அவர்கள் முத லிடத்தைப் பெறவேண்டும் என்று விரும்புவதை நான் வரவேற் கிறேன். அப்படியொரு ஆரோக்கியமான போட்டி இருப்பது நல் லதுதான். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, எந்தெந்த பகுதியில் பால் உற்பத்தி யாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லையோ அங்கெல்லாம் துவக்க வேண்டுமென்று விரும்பினால் அதைச் செய்வதற்கு அரசு தயா ராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 515. திரு. ஏ. ரவிக்குமார், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.